Registered as a Newspaper

பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 22

திங்கட்கிழமை
18 டிசெம்பர் 2023

மார்கழி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

## முச்சந்தி முரளி



"சில்மிஷங்களால சீரழியிற இளம்சந்ததியில கில்மிஷா மாதிரி சாதிக்கிற பிள்ளையளும் இருக்கத்தான் செய்யினம் பாருங்கோ"

## முல்லைத்தீவு, கிளிநொச்சியில்
# வெள்ளப் பேரிடர்!!!

### ஒருவர் உயிரிழப்பு!
### நலன்புரி நிலையங்களில் மக்கள்!
### தேசிய இடர்முகாமைத்துவ தரவுத்தளத்தில் தகவல்கள் இருட்டடிப்பு!

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 18**

**வடக்கில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் பேரிடரை எதிர்கொண்டுள்ளன. இரு மாவட்டங்களிலும் மாத்திரம் 2 ஆயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரம் பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.**

11

## கைக்குண்டு மீட்பு

கொடிகாமம், டிசெ. 18
மிருசுவிலில் கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.
மிருசுவில் சந்திக்கு அண்மையிலுள்ள மைதானத்தில் சந்தேகத்துக்கிடமான பொருளொன்று அடையாளம் காணப்பட்ட நிலையில் கொடிகாமம் பொலி 11

## சாகலவுக்கு தேர்தல் பணி

கொழும்பு, டிசெ. 18
ஜனாதிபதி செயலகத்தின் தலைமை அதிகாரியாகப் பணியாற்றும்முன்னாள்அமைச்சர் சாகல ரத்நாயக்கவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை வழிநடத்தும் அதிகாரியாக நியமிக்க ஜனாதி 11

## அச்சுவேலியில் அதிக மழை

யாழ்., டிசெ. 18
நேற்றுமுன்தினம்சனிக்கிழமை இரவு 8.30 மணி முதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரையான 24 11

## மீனவர்கள் 14 பேர் கைது

யாழ்., டிசெ. 18
இலங்கை கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 14 11

## இன்னமும் இரண்டு காற்றுச் சுழற்சிகள்
### வடக்கை வதைக்கும் மழை

யாழ்ப்பாணம், டிசெ. 18
இந்த மாதம் முடிவடைவதற்கிடையில் மேலும் இரண்டு காற்றுச் சுழற்சிகள் உருவாகும் வாய்ப்புகள் உள்ளன. இதில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆனால், ஆகக் குறைந்தது ஒரு காற்றுச் சுழற்சியாவது தோன்றும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.
'வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் 11

## வீட்டுக் கூரைக்குள் 68 கிலோ கஞ்சா

கிளிநொச்சி, டிசெ. 18
வீட்டுக்கூரைக்குள்மறைத்து வைக்கப்பட்டிருந்த 68 கிலோவுக்கு அதிகமான 30 கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி ஒரு கோடியே 32 இலட்சம் ரூபா என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கிளிநொச்சிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பாரதிபுரத்தில் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் சோதனை நடத்தினர். அப்போது வீட்டின் கூரைக்குள் இருந்து கஞ்சாப்பொதியைக் கைப்பற்றினர். 11

## எச்சரிக்கை

மன்னார், டிசெ. 18
மல்வத்து ஓயாவுக்கான நீர் வரும் தந்திரிமலை நீர்த் தேக்கத்தில் அதன் குறிக்கப்பட்ட கொள்ளளவை மீறி நீர் தேங்கியுள்ளதால் மன்னார் அருவியாற்றில் நீர்வரத்து அதிகரித்து சில வேலைகளில் வெள்ள அபாயம் ஏற்படலாம் என்று மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.
தொடர்ச்சியாகமழைவீழ்ச்சி பதிவானால் இவ்வாறான வெள்ள அபாயத்தை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-ஒ-213)



## ஈழத்து கில்மிஷா 'சரிகமப'வில் சாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 18
தென்னிந்தியாவின் 'ஸீ' தமிழ்த் தொலைக்காட்சியில் இடம்பெற்ற சிறார்களுக்கான 'சரிகமப' இசை நிகழ்ச்சியில் யாழ்ப்பாணம், அரியாலையைச் சேர்ந்த சிறுமி கில்மிஷா வெற்றி பெற்றுள்ளார்.
'ஸீ' தமிழ்த் தொலைக்காட்சியில் இடம்பெறும் சரிகமப இசை நிகழ்ச்சி அண்மையில் 28 சிறுவர்களுடன் ஆரம்பமாகியது. இலங்கையில் இருந்து மலையகத்தைச் சேர்ந்த அசானி மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கில்மிஷா ஆகிய இருவரும் கலந்துகொண்டனர்.
இறுதிப்போட்டிக்கு கில்மிஷா உட்பட 6 பேர் தெரிவாகியிருந்தனர். இறுதிப் போட்டி நேரு உள்ளக விளையாட்டரங்கில் நேற்று 11

## 800 ரூபா கடனால் பறிபோனது உயிர்!



### ஊரெழுவில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 18
800 ரூபா கடன் பணத்தைக் கேட்டு இளம் குடும்பத் தலைவர் மீது, இளைஞன் ஒருவன் நடத்திய தாக்குதலால், அடிகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றவர் நேற்று முன்தினம் சனிக் 11


### அனுமதியில்லாத
## நடைபாதை வியாபாரம்; உடனடியாக அகற்றுக!

### ஆளுநர் கட்டளை

கொழும்பு, டிசெ. 18
டெங்கு நோயாளர்களது எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக யாழ். மாவட்டத்தில் காணப்படும் அனுமதியற்ற நடைபாதை வியாபார நிலையங்களை உடனடியாக அகற்றுமாறு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார். 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## குற்றங்கள்

### கைபேசி தகராறு ஒருவர் கொலை

கொழும்பு, டிசெ. 18

புதிய களனி பாலத்துக்கருகிலுள்ள சேதவத்தை பகுதியில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது. சம்பவம் தொடர்பில்18 வயதுடைய இரண்டு சந்தேகநபர்கள் கிராண்ட்பாஸ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கையடக்கத் தொலைபேசி வைத்திருந்த ஒருவரிடம் அதனைத் தருமாறு இருவர் கேட்டுள்ளனர். அவர் மறுக்கவே அதனால் உண்டான வாக்குவாதம் கொலையில் முடிந்துள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

### மாத்தறையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, டிசெ. 18

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் இருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மாத்தறை - வெலிகம பகுதியில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

### துப்பாக்கியுடன் நடத்துநர் கைது

கொழும்பு, டிசெ. 18

கைத்துப்பாக்கி மற்றும் ஐந்து தோட்டாக்களுடன் பேருந்து நடத்துநர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அம்பலாங்கொடை - உரகஸ்மங்ஹந்திய பேருந்து நிலையத்துக்கருகில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பாதாள உலகக் குழுவின் உறுப்பினரென விசாரணையில் தெரியவந்துள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

### சகோதரர்கள் இருவர் கைது

கொழும்பு, டிசெ.18

பல பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் மூவர் அத்துகிரியவில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான சான்றுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# இலங்கையின் ஸ்திரநிலை பிராந்தியத்துக்கு அவசியம்



## கோபால் பாக்லே சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ.18**

**இலங்கையின் பொருளாதார அரசியல் ஸ்திரத்தன்மை என்பது இந்தியாவுக்கு மாத்திரமல்ல, பிராந்திய நலன்களுக்கும் மிகவும் அவசியமான ஒன்றாகும். இலங்கை போன்ற நட்பு நாடொன்று நெருக்கடிகளை எதிர்கொள்ளும்போது அதன் தாக்கம் நிச்சயம் பிராந்தியத்திலும் இருக்கும்.**

- இவ்வாறு இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மூன்று ஆண்டு கால இந்திய இராஜதந்திர சேவையைக் கடந்த வெள்ளிக்கிழமையுடன் உத்தியோகபூர்வமாக நிறைவு செய்துள்ள தூதுவர் கோபால் பாக்லே, அவுஸ்திரேலியாவுக்கான இந்தியத் தூதுவராக சேவையில் இணையவுள்ளார். தனது இலங்கை சேவைக்காலம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- பிராந்தியத்தில் நட்பு நாடுகள் சவால்களை எதிர்கொள்ளும்போது, அயலகத்துக்கு முதலிடம் என்ற கொள்கையின் அடிப்படையில் இந்தியா தலைமைத்தும் எடுத்து நிலையான தீர்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும். இவ்வாறான ஒத்துழைப்புகள் இலங்கைக்கு மாத்திரம் நன்மையளிக்காது.

பிராந்திய நலன்களிலும் தொடர்புபடும்.

கலாசாரம், பண்பாடு, மக்கள் தொடர்பாடல் என்பவற்றை மையப்படுத்திய இரு நாட்டுச் சுற்றுலா, தகவல் தொழில்நுட்ப மற்றும் வலுசக்தி உள்ளிட்டபுதிய இணைப்புகளால் இலங்கை நலனடையும் - என்றார். (ச-இ)

## ஜனவரியில் ரணில் தேர்தல் பரப்புரை!

கொழும்பு, டிசெ.18

ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரை நடவடிக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகவுள்ளது என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணியாள் தொகுதி பிரதானியுமான சாகல ரத்நாயக்க தேர்தல் பரப்புரை முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

அடுத்த வருடம் ஜூலை மற்றும் செப்ரெம்பர் மாதங்களுக்கிடையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளது எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதியின் தேர்தல் பரப்புரை பொறுப்பு பெரமுனவைச் சேர்ந்த மூன்று அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (ச-44)

## சொத்துவரி நடைமுறை ஐ.எம்.எப். வலியுறுத்து

### ஆங்கில ஊடகம் தகவல்

கொழும்பு, டிசெ.18

2025ஆம் ஆண்டில் வருமான இலக்குகளை எட்டுவதற்கு அடுத்தவருடம் முதல் சொத்துவரியை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவது மிகவும் கட்டாயம் என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

நிதியத்தின் இலங்கைக்குப் பொறுப்பான தலைவர் பீற்றர் போவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார் என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வரியை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பதாக நாட்டிலுள்ள அனைத்துச் சொத்துகளையும் முறையாக மதிப்பீடு செய்யவேண்டும். வரி விதிக்கப்படும் சொத்தை முறையாகப் பதிவு செய்திருப்பது அவசியம். இலங்கை எதிர்பார்த்த வரி வருவாய் இலக்குகளை இதுவரை எட்டாத காரணத்தால் இந்தப் பரிந்துரை வழங்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## மொட்டு கூட்டாளிகளுக்கு புனர்வாழ்வு அவசியம்



கொழும்பு, டிசெ. 18

கொலைக் கலாசாரம் என்பது ராஜபக்ச குடும்பத்துக்கு புதிய விடயமல்ல. மொட்டுக் கட்சி மாநாட்டு உரை இதனையே வெளிப்படுத்துகிறது என்று மிஹிந்தலை விகாரையின் விகாராதிபதி வலவாஹேஙுனவே தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

எம்மீது கல்வீச்சுதாக்குதல் நடத்தினால் என்ன நடக்கும் என்பது பற்றி பஸில் ராஜபக்ச தனது உரையில் எச்சரிக்கை விடுத்திருந்தார். எவராவது ஒருவர் தலைதூக்கினால் அவரை சாட்சியமின்றி கொன்று புதைத்தனர். நாட்டின் பொருளாதாரத்தைப் படுகொலை செய்தனர். இந்தக் கலாசாரத்தை அவர்களுக்கு மீண்டும் வழங்குவதா?

நாட்டு மக்கள் திண்டாடும் நிலையில், மனச்சாட்சி உள்ள எவரும் மொட்டுக்கட்சி மாநாட்டுக்கு சென்றிருக்கமாட்டார்கள். மொட்டுக் கட்சி மாநாட்டில் பங்கேற்றவர்களின் மனநிலைக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)

## இ.போ.ச. பேருந்து மீது போத்தலால் தாக்குதல்!

யாழ்ப்பாணம், டிசெ. 18

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இ.போ.ச. பேருந்தின் மீது கடந்த வெள்ளிக்கிழமை இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நாவற்குழிப் பகுதியில் பயணித்த நிலையிலேயே பேருந்து மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பயணிகள் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. இது தொடர்பில் சாவகச்சேரிபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (ம-125)

## லொறி மோதி ஒருவர் சாவு!

கொழும்பு, டிசெ. 18

வீதியைக் கடந்த பாதசாரிகள் இருவர் மீது பாரவூர்தி மோதியதில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் ஹோமாகம பிரதான பஸ் நிலையத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

பகமூன பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடையவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப்.பை ஏமாற்றினால் சர்வதேச ஆதரவு கிட்டாது

## மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, டிசெ.18**

**நாம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச் செயற்றிட்டத்துக்கு உண்மையாக இருந்தால் மட்டுமே தற்போது சலுகை வழங்கும் நாடுகள் தொடர்ந்து ஆதரவு வழங்கும். இந்தத் திட்டத்திலிருந்து விலகுவதாக இருந்தால், வருடாந்தம் 6 பில்லியன் டொலர் கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கான இயலுமை எமக்கு இருக்கவேண்டும்.**

-இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதியுதவியைப் பெறுவதற்கு அப்பால், அதனிடமிருந்து இலங்கை தொடர்பில் உத்தரவாதத்தைப் பெறுவதே மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. தற்போது சர்வதேச நாணய நிதியம் வழங்கியிருக்கும் உத்தரவாதத்தின்படி, இலங்கையின் கடன் மீள் செலுத்துகை ஆற்றல் முன்னேற்றமடைந்து வருவதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்றுவதன் காரணமாக ஜப்பான், சீனா, இந்தியா மற்றும் பரிஸ் கிளப் நாடுகள் என்பன இலங்கைக்குக் கடன் சலுகை வழங்குவதற்கு இணங்கியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துக்கு உண்மையாக இருந்தால் மட்டுமே இந்தச் சலுகை தொடர்ந்து கிடைக்கும் - என்றார். (எ-இ)

## பாதுகாப்புச் செயலர் விரைவில் மாற்றம்?

கொழும்பு, டிசெ.18

பாதுகாப்புச் செயலாளர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. எதிர்வரும் ஜனவரி மாதம் இந்த மாற்றம் இடம்பெறவுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

2019ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் தற்போதைய பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். எனினும் தற்போது முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவை நியமிக்க அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

ஜெனரல் ஜகத் ஜயசூரிய 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டுவரை இலங்கையின் 20ஆவது இராணுவத் தளபதியாக கடமையாற்றியிருந்தார். இவர் மீது இறுதிப்போர் தொடர்பான பல்வேறு போர்க் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தென் அமெரிக்காவின் மனித உரிமைகள் அமைப்புகளால் 2017ஆம் ஆண்டு ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக வழக்கும் தொடரப்பட்டிருந்தது.

புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கமையவே, முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக போர்க்குற்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று தற்போதைய பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன கடந்த காலங்களில் தெரிவித்திருந்தார். (எ-இ)

## மயான வீதி சீரில்லை சடலம் காவும் நிலை!

### தென்மராட்சி தெற்கு மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், டிசெ. 18

நாவற்குழி, கேரதீவு வீதி வேலம்பிராயிலுள்ள பிண முருங்கை இந்து மயானத்துக்குச் செல்லும் வீதி சீரமைப்பின்றி குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் சடலத்தைக் கொண்டு செல்வோர் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர் என்று தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தின் நாவற்குழி கிழக்கு , கோவிலாக்கண்டி, தச்சன்தோப்பு உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் இந்த மயானத்தையே பயன்படுத்துகின்றன.

சாவகச்சேரி பிரதேசசபையின் பராமரிப்பில் உள்ள இந்த மயானம் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் காணப்படுகிறது.

இந்த மயானத்துக்குச் செல்லும் வீதியைப் புனரமைத்துத்தருவதுடன் மயான எரிகொட்டகையையும் சீரமைத்துத் தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-9)

## நீதித்துறை அதிகாரிகளுக்கு மாற்றம்

கொழும்பு, டிசெ.18

மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதிவான்கள் உட்பட 54 நீதித்துறை அதிகாரிகளை இடமாற்றம் செய்ய நீதிச் சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

சேவை அவசியம் கருதி வருடாந்த சுழற்சி முறைமையின் அடிப்படையில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இந்த இடமாற்றம் வழங்கப்படவுள்ளது என்று ஆணைக்குழுவின் செயலாளர் எச்.எஸ்.சோமரட்ண தெரிவித்துள்ளார். (எ-இ)

## ஆபத்தான மரங்கள்

கொழும்பு, டிசெ.18

கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 100 ஆண்டுகள் பழமையான 558 ஆபத்தான மரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

558 மரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும், அவற்றில் 214 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன எனவும் கொழும்பு மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## தினம் தெரியுமோ?

**யா**ழ்ப்பாணத்துப் பெரிய புள்ளி ஒராளின்ர மகன் புத்தளத்தில பத்துக்கிலோ போதைப்பொருளோட பிடிபட்ட கதையொண்டு காத்துவாக்கில காதில விழுந்திருக்கும். பெரிய 'முதலீடு' செய்யக் கூடிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்த, நிறைய பெற்றோல் செற் வைச்சிருக்கிற, ஒரு ரீவிச் சனலையே நடத்துற, கேபிள் லைனில கொடிகட்டிப் பறக்கிற, காசுக்குள்ள மிதக்கிற குடும்பத்தைச் சேர்ந்தவர் போதைப்பொருள் யாவாரம் செய்யிறார் எண்டதை ஆரும் நம்ப மாட்டினம். அவைக்கு என்னத்துக்கு உந்தப் பாவச் சொத்து ? எண்டுதான் சனம்நினைக்கும். ஆனால் அதுதான் இப்பிடிப் போதைப்பொருள் கடத்துற ஆக்களின்ர பலம். அவை மட்டுமில்லை யாழ்ப்பாணத்தில இன்னும் நிறையப் பணமுதலையள் இப்பிடியான பாவச் சொத்தைச் சேர்க்கிற போதைப்பொருள் பிஸ்னஸிலதான் கடும் ஆர்வமா இருக்கினமாம். ஆனால் அவையிட்ட காசு இருக்கிறதால, பிடிபட்டாலும் கூட காசை அடிச்சு, தங்கட அல்லக்கையளை மாட்டி விட்டுட்டு இவையள் தப்பிடுவினம்.

புத்தளத்திலையும் இதுதான் நடந்தது. நேவிக்காரரின்ர துணையோடதான் இந்தப் போதைப்பொருள் கடத்தல் கனநாளா நடந்திருக்கு. அதில ஆரோ ஒரு நேவி, நேரடியா இந்த விசயத்தை சி.ஐ.டி.க்காரரின்ர காதில போட, அவங்கள் மோப்பம் பிடிச்சு, ஆளை ஹெரோய்னும் கையுமாப் பிடிச்சுப் பொலிஸில குடுத்திட்டாங்கள். ஆனால் பணம் பாதாளம் மட்டும் பாயேக்க, பொலிஸிட்ட மட்டும் பாயாமல் மேயுமோ? மேல்மட்டங்கள் வரை காசை இறைச்சு, எப்பிடி கேஸை இல்லாமல் செய்யலாம் எண்டு யோசிச்சிருக்கினம். ஹெரோய்னைப் பிடிச்சிட்டு அதுக்குப் பதிலா 'குஷ்' எண்ட போதைப்பொருளைத்தான் பிடிச்சனாங்கள் எண்டு பொலிஸ் சொல்லியிருக்கு. அதுக்கும் காரணம் இருக்கு.இந்தக் குஷ் எண்ட போதைப்பொருள் பற்றி இலங்கைச் சட்டத்தில ஒண்டும் சொல்லுப்படாததால, அந்தக் கேஸில போட்டால் வெளியில வந்திடலாம்.அதோட பிடிபட்ட போதைப்பொருளின்ர நிறையையும் பொலிஸ் குறைச்சுத்தான் சொல்லியிருக்கு. அப்பிடி நிறையையும் குறைச்சால் கேஸ் நிண்டுபிடிக்காது. இப்பிடி காசை வைச்சு கேஸை இல்லாமல் ஆக்கிறதுக்கு கடும்வேலையள் இன்னும் நடக்குது.

இப்பிடியான சனத்தை அழிக்கிற கடத்தலுக்கு தங்கட 'ஹப்பிட்டலை'(முதலீட்டை) போட்டு, இளம்பெடியளைச் சீரழிச்சுக்கொண்டு, தங்கட ரீவியில மட்டும் அதேபோதைப்பொருளுக்கு எதிரா முதலைக்கண்ணீர் வடிக்கிறது எந்தவிதத்தில நியாயம் எண்டு தெரியேலை. இப்பிடி போதைப் பொருள் வித்த காசிலதான் பெற்றோல் செற்றுகளும், கடையளும் அவையின்ர பேர்ல வந்திருக்கும்போல. அப்ப அவையின்ர எல்லா பிஸ்னஸுக்கும் உண்மையான 'ஹப்பிட்டல்' என்னவெண்டு சனத்துக்கு இப்பவாவது விளங்கினால் சரி.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் விவசாயக் கண்காட்சி



கிளிநொச்சி, டிசெ. 18

கிளிநொச்சி, சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் விவசாயம் சார்பான கண்காட்சியொன்று அண்மையில் இடம்பெற்றது.

கண்காட்சியில் சேதன விவசாய பாடசாலைத் தோட்டம், மூலிகைத் தோட்டம், விவசாய தொழில்நுட்பம், உணவுத் தொழில்நுட்பம், போசணைசார் உணவு கால்நடை உற்பத்தி என்பன தொடர்பான கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் திட்டமிடல் பிரிவின் திட்டமிடல்பணிப்பாளர் கே.கே. சிவச்சந்திரன், கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி. கமலராஜன், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சு. ஜெகதீஸ்வரி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ம-13-75)



யாழ். மாவட்டத் தங்குமிட விடுதி உரிமையாளர்களுக்கு, சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச்செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் இந்தச் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது. (ச-66)

# வீரியம்மிகு வெண்தத்தி

## மன்னாரில் தீவிரப்பரவல்

### விவசாயிகளுக்கு எச்சரிக்கை



மன்னார், டிசெ. 17

**மன்னார் மாவட்டத்தில் பெரும்போக நெற்பயிர்ச் செய்கையில் வெண்முதுகு தத்தி, மடிச்சுக்கட்டி தாக்கங்கள் பரவலாக ஏற்பட்டு வருகின்றன. இந்தத் தாக்கங்களை விவசாயிகள் கண்டறிந்தால் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மன்னார் மாவட்ட கமநல சேவைப் பணிப்பாளர் திருமதி சாகிரா பானு எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்பொழுது மழையுடன் கூடிய கால நிலையால் நெல் வயல்களில் அதிக பீடைத்தாக்கங்கள் ஏற்படுகின்றன. வடமாகாணத்தில் புதிதாகப் பரவிவரும் வெண்முதுகுத் தத்தித் தாக்கம் மற்றும் இலை மடிச்சுக்கட்டித் தாக்கங்கள் பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் பெரியபண்டி விரிச்சான், இரணை இலுப்பைக்குளம் போன்ற பிரதேசங்களில் சுமார் 60 ஏக்கர் நிலப்பரப்பில் 30 - 40 வீதமான பகுதி களில் தத்தித் தாக்கம் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த வெண்முதுகு தத்தி, கபில நிறத் தத்தியிலும் பார்க்க அதிக வீரியம் கொண்டமையால் தாக்க அறிகுறி தென்பட்டு இரண்டு மூன்று நாள்களிலேயே முழு வயலும் அழிந்துவிடும் நிலைமை உருவாகும்.

வடமாகாணத்தில் நெல் உற்பத்தி பிரதேசமான மன்னார் மாவட்டமானது இந்தத் தத்தித் தாக்கத்தால் பாதிக்கப்படின் நுகர்வுக்கான நெல் மட்டுமல்லாது விதை நெல்லுக்கும் தட்டுப்பாடு ஏற்படலாம். எனவே இந்தத் தாக்கத்தை அடையாளம் கண்டவுடன் உங்கள் பிரதேச விவசாயப் போதனாசிரியருடன் தொடர்புகொண்டு வயலைப் பாதுகாக்கவேண்டும்- என்றார். (ச-213)

# நிரோஷ் வழக்கு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ். நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தடுத்ததன் மூலம் அரச கருமங்களுக்குத் தடை ஏற்படுத்தினார் என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு, சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்காதமையால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021 ஆண்டின் ஆரம்பத்தில் தொல்லியல் திணைக்களமும் இராணுவத்தினரும் இணைந்து நிலாவரைக் கிணறு அமைந்துள்ள வளாகத்தில் சந்தேகத்துக்கிடமான வகையில் அத்திபாரம் வெட்டியமையைத் தொடர்ந்து நிரோஷ் சிலருடன் வருகைதந்து அந்த நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தினார்.

இதையடுத்தே அவருக்கு எதிராக மேற்படி வழக்குத் தொடரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





கோண்டாவில் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் தீர்த்தோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ரி-27)



உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் 2023ஆம் ஆண்டுஉயர்தர மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு உயர்தர மாணவர் மன்றத் தலைவர் நி. நதீஸ் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ரி-159)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்படலாம். உறவினர்கள் வழியில் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. உங்கள் யோசனையை குடும்பத்தினர் ஏற்றுக்கொள்வார்கள்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். குடும்பத்தில் பெரி யவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். நன்மைகள் அதிகரிக்கச் செய்யும். மற்றவர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**மிதுனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண் விவாதம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும்.

**சிம்மம்:** வரவும் - செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும். தேவையான பணம் கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். மற்றவர்க ளுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். மனஅமைதி ஏற்படும்.

**விருச்சிகம்:** உறவுகளால் நன்மை ஏற்படும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். உடல்நலனில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்தபடி இருக்கும்.


**தனுசு:** உற்சாகமான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். அவசியமான செலவுகளாகவே இருக்கும். எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கக்கூடும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள். பிணக்குகள் நீங்கும். எதிர்பாராத செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கேளாமற்போகும் கல்விக்குரல்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் மன அழுத்தம் மற்றும் வேறுபல பிரச்சினைகளுக்கு ஆட்பட்டிருக்கின்றனர் என்று வெளிப்படுத்தியிருக்கின்றார் மூத்த விரிவுரையாளரான சிவநந்தினி. இவ்வாறான காரணிகளால் மாணவர்கள் தங்களின் கற்றல் நடவடிக்கைகளை நிறைவுசெய்து வெளியேறுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டுமல்ல, இன்று மாணவர்கள் மன அழுத்தத்துக்கு உட்பட்டவர்களாகவும் மனநோயாளிகளாகவும் மாறிக்கொண்டிருப்பது உலகளாவிய ரீதியிலான பொதுப்பிரச்சினையாகவே அமைந்திருக்கின்றது. மேற்கத்தேய நாடுகள்கூட இதற்கு விதிவிலக்கல்ல. கனடாவின் ரொறன்ரோ மாகாணத்தில் மாணவர்கள் மத்தியில் மன அழுத்தம் அதிகரிப்பது அவதானிக்கப்பட்டு, பாடசாலை மாணவர்கள் திறன்பேசிகளைப் பாவிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன், மாணவர்களின் மன அழுத்தத்தைப் போக்குவதற்காக இணைப் பாடவிதானச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக ஒருதொகை நிதியை ஒதுக்கீடு செய்யும் அளவுக்கு அந்த மாகாண அதிகாரம் இதுவிடயத்தில் கவனம் செலுத்தியிருக்கின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடர்பில் வெளிவந்திருக்கும் இந்த ஆபத்தான செய்திக்கும், கனடாவின் - ரொறன்ரோவில் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் சீர்திருத்தங்களுக்கும் இடையில் அவ்வளவு பெரிதான வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. பிரச்சினை ஒன்றுதான் - பின்னணியும் ஒன்றுதான்.

கல்வி என்பது ஒன்றை அறிதலே. அதனால்தான் அதனை 'கற்றல்' எனும் பெயர்கொண்டு அழைக்கின்றனர். ஒன்றைத் தெரிந்துகொள்ளும்போது அல்லது தெரிந்துகொள்கின்ற செயற்பாட்டின்போது அங்கே மன அழுத்தம் என்பதற்கு ஏது இடம்? ஒரு மாணவன் ஒரு விடயதானத்தை எவ்வளவுதூரம் கற்றுக்கொண்டுள்ளான் என்பதற்காக மேற்கொள்ளப்படும் அடுத்தடுத்த கட்டங்களே மாணவர்களை மன அழுத்தத்துக்கு உட்பட்டவர்களாக மாற்றிவைத்திருக்கின்றது. தவிர, விரவியிருக்கும் போதைப்பொருள், திறன்பேசிகள் என்பனவும் இன்றைய மாணவச் சமூகம், மாணவர்களுக்கே உரித்தான அடையாளத்தை இழந்து காட்டுமிராண்டிகளாகவும் - மனநோயாளிகளாகவும் மாறிக்கொண்டிருப்பதற்கான காரணிகளாக அமைகின்றன.

நிலையான கல்விக்கொள்கையென்ற ஒன்று, இலங்கையில் இன்றில்லை. முற்றுமுழுதாகப் பரீட்சைகளை மையப்படுத்தியதாக அல்லாத ஒரு கல்விக்கட்டமைப்பே இலங்கைக்கு இன்று காலத்தேவையாக இருக்கின்றது. துறைசார் வல்லுநர்கள் முதல் நாடாளுமன்றம் வரை இதற்கான குரல்கள் ஒலிக்கின்றபோதிலும் இன்னமும் வேண்டப்படும் சீர்திருத்தத்தை செய்தாகவில்லை. மறுமுனைகளில் பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் போதைப்பொருள் மாபியாக்களின் கேந்திர நிலையங்களாக மாறும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன. பாடசாலைகளையும் - பல்கலைக்கழகங்களையும் இலக்குவைத்தே இன்று ஏகப்பட்ட போதைப்பொருள் கடத்தற்காரர்களும் சூத்திரதாரிகளும் இயங்கிக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறானதொரு நிலையில் மாணவர்களிடத்தில் கனதியான 'கற்றல் செயற்பாடு' எவ்வாறு சாத்தியமாகும்.

இலங்கையின் கல்விக் கட்டமைப்பு முற்றுமுழுதாக மறுசீரமைக்கப்படவேண்டும். சிவில் துறையையும் பொலிஸ்துறையையும் உள்ளடக்கியதாக அந்த மறுசீரமைப்பு அமையவேண்டும். வளமான கற்றல் நடவடிக்கைக்கு ஏதுவான பின்னணியொன்றை உருவாக்கிக் கொடுக்கவேண்டிய காலக்கடமை இன்றிருக்கின்றது. அத்தகைய ஒரு சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டாலேயே இலங்கையின் கல்வி மீண்டெழும். ஆனால், கல்விக் கட்டமைப்பில் தனியாரை மையப்படுத்திய சீர்திருத்தங்களுக்குக் காட்டும் முக்கியத்துவத்தில் பாதிகூட மாணவர்களின் நலன்சார்ந்த சீர்திருத்தங்களில் காட்டுவதற்கு அரசாங்கத்துக்கு மனமில்லை என்பதே கசப்பான உண்மை!

# ஐ.ம.சக்தியில் இணையும் சுதந்திர மக்கள் பேரவை!

**கொழும்பு, டிசெ.18**

**நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான 'சுதந்திர மக்கள் பேரவை'யின் முக்கிய நான்கு உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணையவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கலாநிதி நாலக கொடஹேவா, பேராசிரியர் சன்ன ஜயசுமண, டிலான் பெரேரா ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணையவுள்ளனர் என்று வெளியாகியுள்ள தகவலை அடுத்து கொழும்பு தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த கலாநிதி நாலக கொடஹேவா, சுதந்திர மக்கள்பேரவையின் அனைத்து உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணையவுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். இது தொடர்பாக "மேலவை இலங்கை கூட்டணியின்" நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவிடம் கேட்டபோது, சஜித் தரப்புடன் இணைவது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்றார். நாடாளுமன்றத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படாததால், எதிர்கால அரசியல் தீர்மானங்களை எடுப்பதற்கு இன்னும் கால அவகாசம் உள்ளது என்றும் தெரிவித்தார். (எ-இ)

# அரசியலில் இன்னமும் சாதிப்பாராம் மஹிந்த

கொழும்பு, டிசெ.18

அரசியலிலிருந்து ஓய்வு பெறும் எண்ணம் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஒவ்வொரு கட்சியும் மாநாடுகளை நடத்த வேண்டும் என்றும், அதன் மூலம் கட்சியின் பலத்தைக் காட்ட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

# ஏப்ரல் மாதம் வரை முட்டை இறக்குமதி

கொழும்பு, டிசெ. 18

2024ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் திகதி வரை முட்டைகளை இறக்குமதி செய்தவதற்கு இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்துக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஒரு முட்டை 35 ரூபாவுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். (ச-இ)

# வனவிலங்குத்துறை அதிகாரிகள் இன்றுமுதல் பணிப்புறக்கணிப்பில்

கொழும்பு, டிசெ. 18

நாடளாவிய ரீதியில் இன்றுமுதல் அடுத்த 18 நாள்களுக்கு வனவிலங்குத்துறை அதிகாரிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர் என்று இலங்கை வனவிலங்குத்துறை அதிகாரிகள் திணைக்களத்தின் தலைவர் பிரபாஷ் கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

வனவிலங்குத்துறை உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், சேவையை மதிப்பீடு செய்யாமை உள்ளிட்டவை குறித்து அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காதமையைக் கண்டித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது என்றும் தெரிவித்தார். (ச-இ)

## நாளை

19.12.2023

**செவ்வாய்க்கிழமை**

**டிசெம்பர் 03**

சுபநேரம் : 10.53 - 12.23

ராகுகாலம் : 03.23 - 04.53

## நாளொரு நல்வார்த்தை

**காயம், பயம் மற்றும் விரக்தியின் வெளிப்புற வெளிப்பாடே கோபம்.**

- பில் மெக்ரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் உத்தியோகத்தர்களுக்கு 'இலத்திரனியல் பதிவு அட்டை' தொடர்பான பயிற்சிநெறி சுன்னாகம் பிரதேசசபையின் தலைமையக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ரி-66)



முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தின் ஒளிவிழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ரி-75)



# இரு பாடசாலைகளுக்கு வலைப்பயிற்சித் திடல்கள்

முல்லைத்தீவு, டிசெ. 18

முல்லைத்தீவு, மாவட்டத்தில் இரு பாடசாலைகளுக்கு வலைப்பயிற்சி திடல்கள் அமைத்து வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை துடுப்பாட்டத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இலங்கை துடுப்பாட்ட நிறுவனத்தால் சுமார் 3 மில்லியன் நிதிப்பங்களிப்பில் அவை அமைத்துக் கொடுக்கப்பட்டன.

மல்லாவி மத்திய கல்லூரி மற்றும் வெலிஓயா அத்த வட்டுனவா மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கே வலைப் பயிற்சி திடல்கள் வழங்கப்பட்டுள்ளன. (ச-13)

# பண்பாடு, அறநெறிக் கல்வி கல்லுண்டாயில் தெளிவூட்டல்



யாழ்ப்பாணம், டிசெ. 18

கல்லுண்டாய்ப் பிரதேச மக்களுக்குப் பண்பாடு மற்றும் அறநெறிக் கல்வி தொடர்பிலான விழிப்புணர்வு அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவால் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கல்லுண்டாய் பிரதேசம் தொடர்பில் வரலாற்று ஆவணப்படுத்தல் செயற்றிட்டங்களும், பிரதேச மூத்த பிரஜைகளுடனான கலந்துரையாடலின் பிரகாரம் தகவல்கள் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளும் இடம்பெற்றன. (ச-66)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தெரிவுசெய்யப்பட்ட 40 மாணவர்களுக்கு வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ம-9)

# கௌரவிப்பு நிகழ்வு



தரம்5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வவுனியா பன்றிக்கெய்தகுளம் வித்தியாலயத்தில் முதல்வர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ரி-75)




மிருசுவில், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்திலிருந்து க.பொ.த. சாதாரணதரப்பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்தவெள்ளிக்கிழமை இடம்பெற்றது. வித்தியாலய பழைய மாணவி அம்பிகாவின் நிதிப்பங்களிப்பில் ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்குப் புத்தகங்கள் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 03 - 1946



மறைவு 16 - 12 - 2023

### தம்பையா பரமேஸ்வரன்

**(Retired Auditor of Cement factory, Parliment & Ministry Office)**

**(ஓய்வுபெற்ற ஓடிட்டர், சீமெந்து தொழிற்சாலை, பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவை)**

காங்கேசந்துறையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா பரமேஸ்வரன் அவர்கள் நேற்று முன்தினம் (16.12.2023) சனிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பராணியின் அன்பு கணவரும், தனுஷியா, சுஜேந்திரன் (Swiss) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபரன் (கண்ணன் - உரிமையாளர் Piruntha Travels), கம்சியா (Swiss) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், இலட்சுமிகாந்தன், வைகுந்தவாசன் மற்றும் சிறீறங்கநாயகி (France), சத்தியபாமா (Landon), சிறீறஞ்சினிதேவி (London) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், புருஷோத் (America), பியாஸ்கரா (பிருந்தன்), மோனிஷா, காசினி (Swiss) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 - முற்பகல் 10.00 மணிவரை அவரது உரும்பிராய் இல்லத்தில் இடம்பெற்று, பின் அஞ்சலிக்காக அன்னாரது பூதவுடல் அவரது சொந்த இடமாகிய காங்கேசந்துறையில் அவரது இல்லத்தில் (கீரிமலை வீதி) முற்பகல் 11.00 மணியளவில் வைக்கப்பட்டு பின் பூதவுடல் காங்கேசந்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு**
**077 546 8956**
**077 865 8557**

**தகவல்: குடும்பத்தினர்**
**சிவபரன் - தனுசியா (மகள்)**
**சுஜேந்திரன் (மகன்) , கண்ணன் (மருமகன்)**

(CS 27405)(K-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 12 . 1938



மறைவு 16 . 12 . 2023

### சந்திரசேகரம் தங்கரத்தினம் (கிளி)

அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான சந்திரசேகரம் தங்கரத்தினம் (கிளி) நேற்றுமுன்தினம் (16.12.2023) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும், பன்னாலையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சந்திரசேகரத்தின் அருமை மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, செல்வராணி, இராசம்மா மற்றும் பாக்கியம் (சுன்னாகம்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (சின்னண்ணை) மற்றும் பறுவதம் (மணி - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், டிலோஜினியின் (கனடா) அன்புத் தாயாரும், புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சுதானந்தனின் (கனடா) ஆருயிர் மாமியும், விதுஜா (கனடா), இந்துஜா (கனடா), அஜந்த் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2023) திங்கட்கிழமை கனடாவில் Chapel Ridge Funeral Home இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**53, அம்பலவாணர் வீதி,**
**உடுவில் கிழக்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 086 8833**

(cs27408) (CS) N-1

## 40 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் குமரபுரம் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட

### தர்மலிங்கம் சின்னம்மா

எம் பாசத்தின் அருமைத் தாயே
கண்ணீராய் ஆற்றிவிட கண்ணீரும்
- இல்லையம்மா
உங்களை இழந்து 40 ஆண்டுகள்
- ஆகிவிட்டதம்மா
தவமாய் தவமிருந்து பெற்ற ரத்தினத்தை கூட
ஆசையாய் உணவூட்டி அழகாய் ஆடையிட்டு
அன்பினால் அரணவணைக்கக் கூட
- முடியாமல் அம்மா
உங்களை பாவி முருகா பறித்து விட்டானே
ஐயாவின் அன்பு முகத்திலே உம்மையும்
காணவைத்து கதறி அழுகின்றோம் அம்மா
எங்கள் அன்புத் தெய்வம் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**குமரபுரம், பரந்தன்.**

(CS 27404)(k-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 11 . 1954



மறைவு 16 . 12 . 2023

இராமுப்பிள்ளை அசோகநாதன்


இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை அசோகநாதன் அவர்கள் 16.12.2023 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27410) S-1


# தடைசெய்யப்பட்ட மருந்து கடத்திவந்த இருவர் கைது



மன்னார், டிசெ. 18

மன்னார், நானாட்டானில் கடத்திவரப்பட்ட தடைசெய்யப்பட்ட மாத்திரைகள் மற்றும் மருந்துகளுடன் இருவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது தடைசெய்யப்பட்ட 120 மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் நானாட்டான் - அச்சங்குளத்திலுள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2700 மருந்துப் பொருள்கள் மீட்கப்பட்டதுடன் மேலுமொருவர் கைதுசெய்யப்பட்டார். நானாட்டான் - சிலாவத்துறையைச் சேர்ந்த 22 மற்றும் 23 வயதுடைய சந்தேகநபர்களே கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களையும் சான்றுப்பொருள்களையும் மேலதிக சட்டநடவடிக்கைக்காக சிலாவத்துறை பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர். (ச-213)


## 27 ஆம் வருட நினைவில்...

### வி.எஸ்.குணசிங்கம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் வன பரிபாலனத் திணைக்களம்)



தோற்றம் 05.02.1931 மறைவு 16.12.1996

வருடங்கள் பலதாய் கடந்து
- செல்லும்
உங்கள் நினைவுகளும்
- நிழலாய்
எம்முடன் கூடவரும்
அன்பால் அரவணைப்பால்...
அக்கறையால் - என்றும்
எமக்குள் நீங்கள் இருப்பீர்கள்


நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

3, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(cs.27404) (N-1)



## சேவை நலன் பாராட்டு



1993 ஆம் ஆண்டிலிருந்து 2023 வரையான 30 வருடங்கள் யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தராக எம்மோடு பணியாற்றி வந்த எமது சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினராகிய

காசிப்பிள்ளை சத்தியதீசன்

அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன்

அகவை அறுபதில் (17.12.2023) தொடங்கிய ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைவதற்கு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம், யாழ். பல்கலைக்கழகம்.


## முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம்


கொழும்பு, டிசெ. 18

'அஸ்வெசும' கொடுப்பனவு திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்போர் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம், கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் திறமை சித்தியும் உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பம் முடிவுத் திகதி எதிர்வரும் 27 ஆம் திகதி என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது. (ச-75)


## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 05 . 1956



மறைவு 17 . 12 . 2023

### சுப்ரமணியம் சோதிநாதன்

(சீமாட்டி சோதி)
(Oceanick Impex உரிமையாளர்)

உடுவில் பலகாடு காரைநகரை பிறப்பிடமாகவும். வவர்செட் பிளேஸ் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் சோதிநாதன் (சீமாட்டி சோதி) (Oceanick Impex உரிமையாளர்) நேற்று (17-12-2023)ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் பூரணம் தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான முருகேசம்பிள்ளை பொற்கொடி தம்பதியினரின் மருமகனும். அஞ்சலிதேவியின் அன்புக் கணவரும். அபர்ணா. அம்புஜன். Dr. மனோஜ்குமார். Dr. பவித்திரா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும். Dr. சசிகுமார். கிரிஸ்னி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதித்தன். அர்சுணன். அஹானா ஆகியோரின் அன்புப் பேரனும். சண்முகநாதனின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

வவர்செட் பிளேஸ்
வெள்ளவத்தை.
தொடர்புகளுக்கு:
0779073081, 0779183714

தகவல்:
குடும்பத்தினர்

(cs.27409) N.1



## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

இம்மாதம் 16 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை

### இந்தியன் செலக்ஷனின்

### நத்தார் மற்றும் புதுவருட ஜவுளிப் பண்டிகை

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்

பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
சல்வார்கள், சல்வார் துணிகள், டொப், பாட்டி புரொக், சேட்,
ரீ சேட், சோட்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள்



### விஷேட விலைக்கழிவு

ரெடிமேட் சல்வார் 750 /=

டொப் 500/=

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

காலம்: 16.12.2023 முதல் 31 ஆம் திகதி வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'பெண் தலைமைத்துவம்' விருது வென்றார் றூபவதி

கிளிநொச்சி, டிசெ. 18

'முன்மாதிரியான பெண்தலைமைத்துவம்' விருதை கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் வென்றுள்ளார். நியூயோர்க்கை தளமாகக் கொண்ட Women Icon Times Women மற்றும் world Women Council ஆகியவற்றால் இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ச-75)

# அரசமைப்புத் தெளிவூட்டல்

யாழ்ப்பாணம், டிசெ. 18

இலங்கை அரசமைப்புத் தொடர்பான தெளிவூட்டல் செயலமர்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். நகரத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரை ஆற்றினார். (ஒ-66)

# கைது

கிளிநொச்சி, டிசெ. 18

உழவனூர் பகுதியில் தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய உயிர்கொல்லி போதைப்பொருள் மற்றும் சிறிதளவு உயிர்கொல்லி கஞ்சா, 4 தொலைபேசிகள், போதைப்பொருள் ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் ஊசிகள், கூரிய ஆயுதம் என்பனவற்றுடன் ஒருவர் கைதாகியுள்ளார்.

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாக கைதாகிச் சிறைத் தண்டனை அனுபவித்து அண்மையில் விடுதலையானவரே கைதாகியுள்ளார். (அ-ஒ-113)

# கவிழ்ந்தது 'கப்'

வவுனியா, டிசெ. 18

நொச்சிமோட்டை பாலத்துக்கு அருகில் கப்ரக வாகனமொன்று நேற்றுமாலை கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது. கிளிநொச்சியிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்தபோதே வாகனம் விபத்துக்குள்ளானது. வாகன ஓட்டுநர் காயங்களுடன் உயிர் தப்பினார். (அ-ஒ-110)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 . 11 . 1970

மறைவு 18 . 12 . 2016



### திருமதி நிரஞ்சலா ஜெகசோதி

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே
எல்லோர் உள்ளத்திலும் நிறைந்தவளே
நினையாத நேரத்தில் மின்னல் போல்
நீ மறைந்தாலும் எம்மை உருகவைத்து
எங்கள் ஜீவனை உன்னையே
நினைக்க வைத்தாய்.

குடும்பத்தினர்
இல. 40, சுவர்ணா வீதி, கொழும்பு - 06

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 02 . 1932

மறைவு 17 . 12 . 2023



### சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் தியாகராஜகுருக்கள்

கொக்குவில் கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலய பிரதம குருவும், ஆதீன கர்த்தாவும் ஆகிய மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் தியாகராஜக்குருக்கள் நேற்று (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் நடராஜக்குருக்கள் பொன்னம்மா அம்மாவின் அன்பு மகனும், மோகன்ராஜா ஐயரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அன்னபூரணி அம்மா, இரத்தினேஸ்வரி அம்மா ஆகியோரின் அன்புக் கணவரும், பத்மநாதக்குருக்கள் இராஜசேகரக்குருக்கள், ஸ்ரீதரசர்மா, நடராஜக்குருக்கள் (பொற்பதி விநாயகர் ஆலய பிரதம குரு), பத்மாவதி அம்மா, ஜெயலட்சுமி அம்மா, சுகிர்தா அம்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணிய ஐயர், காலஞ்சென்ற சிவஞானக்குருக்கள், ஆனந்தராஜ், காலஞ்சென்ற சிவனேஸ்வரி அம்மா, லதாஅம்மா, சர்வேஸ்வரி அம்மா, ஆனந்தி அம்மா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவன், திரியம்பகி, பவித்திரன், நேத்திரன், சேத்திரன், பவித்திரா, கஜானன், விக்னேஸ், அபிஷாளினி, அபிஷானந், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும், தர்ஷன், கிருத்திகா, செம்பிருதி, யதுஷ், நிக்சரா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2023) திங்கட்கிழமை கொக்குவில் பூநாறி மரத்தடி இல்லத்தில் பிற்பகல் 03.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 471 2555
077610 1819
077 194 0270
077 175 1456

தகவல்:
மகன் தி. நடராஜக்குருக்கள்
(பொற்பதி விநாயகர் ஆலய பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்)

(CS 27413) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 01 . 1953

மறைவு 17 . 11 . 2023



### பொன்னு சிவசுப்பிரமணியம்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு சிவ்சுப்பிரமணியம் நேற்று (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னு மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆறுமுகம் தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகனும் தவமலரின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி பத்மினியின் பெறாமகனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், தெய்வேந்திரம், இராசேந்திரம் மற்றும் றஞ்சிதமலர், பாலேந்திரன், குலேந்திரன், சிவனேந்திரன், முருகேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2023) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 02.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கைதடி நுணாவில் குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(CS 27411) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் தொடர் மழை 56 கிராமங்களுக்கு பாதிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 18

**முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும்மழையால்56கிராமங்களைச் சேர்ந்த 976 குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் இரண்டு இடைத்தங் கல் முகாம்களில் தங்கவைக்கப்பட் டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சி.கோகுலராஜா தெரிவித்துள்ளார்.**



முல்லைத்தீவில் மழையால் ஏற்பட்டுள்ள இடர்நிலை தொடர்பில் கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அதிகமாக குளங்களைக் கொண்ட மாவட்டமாகக் காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்துக் குளங்களும் நிரம்பி வழிகின்றன. முத் தையன்கட்டுக் குளத்தின் நான்கு வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன. மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின் றது. குளங்களுக்கு கீழான பகுதிகளில் வசிக்கும் மக்கள் இதனால் பெரும் சிரமங் களை எதிர்கொண்டுள்ளனர்.

நீர் வடிந்தோடக்கூடிய பாதைகளில் அத் துமீறிக் கட்டிய கட்டடங்களால் நீர் வடிந் தோட முடியாமல் இந்தப் பேரிடர் நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரி வித்தார். (மு-19)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 18

சர்வதேச கடற்றொழிலாளர் தினத்தை முன்னிட்டு விசேட நடமாடும் சேவை யும் நலக்கொடுப்பனவுகளும் எதிர்வ ரும் செவ்வாய்க்கிழமை கடற்றொ ழில் அமைச்சால் முன்னெடுக்கபட வுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்க ளத்தின் உதவிப் பணிப்பாளர் சுதாகர் தெரிவித்தார். எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குருநகர் பகுதியில் இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த நடமாடும் சேவையில் வெளிநோயா ளர் பிரிவு, பற்சிகிச்சை, தொற்று நோய் கண்டறிதல், குருதிப் பரிசோ தனைகள், கண்பார்வை பரிசோ தனை என்பன முன்னெடுக்கப்பட வுள்ள நிலையில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை -கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற கடற்றொழி லாளர்களின் பிள்ளைகளுக்கு ஊக் குவிப்புக் கொடுப்பனவும், பெற் றோருக்கு உலர் உணவுப் பொதிக ளும் யாழ்ப்பாணம் மாவட்டச் செய லகத்தில் வைத்து வழங்கப்படவுள் ளன. (ம-125)




## சிறந்த மருத்துவ சேவை பூவரசன்குளம் முதலிடம்

வவுனியா, டிசெ. 18

பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனை நடத்திய சிறந்த சேவைத் தெரிவில் பூவரசன்குளம் மருத்துவ மனை இந்த ஆண்டுக்கான வவு னியா மாவட்ட முதல் தர பிரதேச மருத்துவமனையாகத் தெரிவாகி யுள்ளது.

அனைத்து சேவைகளின் ஒழுங்கு படுத்தல், மருத்துவமனை தூய்மை மற்றும் முகாமைத்துவம் என்பவற் றிலேயேசிறந்தபுள்ளிகளைப்பெற்று தெரிவாகியுள்ளது. (ச-75)



முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், வடமாகாண பண்பாட்டுத் திணைக்களம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி திணைக்களமும் இணைந்து நடத்திய மாவட்ட பண்பாட்டு பெருவிழாவில் பரத நாட்டிய நிகழ்வை வழங்கிய மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ரி-75)





## முல்லைத்தீவுமாவட்ட பண்பாட்டுப் பெருவிழா

முல்லைத்தீவு, டிசெ. 18

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், வடமாகாண பண்பாட்டுத் திணைக்களம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களமும் இணைந்து நடத்திய பண்பாட்டு பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கரைதுறைப்பற்று பிரதேசசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் நா.வேதநாயகன் கௌரவ விருந் தினராகவும் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராகவும் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் மற்றும் பிரதேச மூத்த கலைஞர்களும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் இறுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கலைத் துறைக்கு மிகுந்த பங்களிப்பை நல்கிய 6 மூத்த கலைஞர் களுக்கு 'முல்லைக் கலைக்கோ' விருதும் கலைத்துறைக்கு மிகுந்த பங்களிப்பை நல்கிய 6 இளம் கலைஞர்களுக்கு 'முல்லை இளஞ்சுடர்' விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ச-75)

## அவசர சிகிச்சைப் பிரிவு அடுத்த மாதம் ஆரம்பம்!

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஜனவரி மாதம் முதல் இயங்கவுள்ளது.

கடந்த ஒரு வருடமாக மூடப்பட்டுள்ள சிகிச்சை அலகைத் திறப்பதுடன் மருத்துவமனையில் மேலும் பல சேவைகளை வழங்குவது தொடர் பான கருத்தமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை மருத்துவமனையில் நடைபெற்றது. அதில் அடுத்த மாதம் முதல் அவசர சிகிச்சைப் பிரிவை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ரி -9)





போக்கட்டி அ.த.க. பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் தி.அபராஜிதன் தலைமை யில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபையின் செய லாளர் க.சந்திரகுமார் கலந்துகொண்டார். (ச-159,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஈழத்து...

மாலை நடைபெற்றது. நிகழ்வு 'ஸீ' தமிழ்த் தொலைக்காட்சியிலும் நேரடியாக ஒளிபரப்பானது.
இந்தப் போட்டியில் வெற்றியாளரைத் தெரிவு செய்வதற்கு வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. தொலைபேசி இலக்கம் வழங்கப்பட்டு அதற்கு 'தவறிய அழைப்பு' எடுப்பதன் ஊடாக வாக்கைப் பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. உலகம் முழுவதிலும் உள்ள ஈழத் தமிழர்கள் கில்மிஷாவுக்காக வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.
இந்த நிலையில் நேற்றைய இறுதிப் போட்டியில் கில்மிஷா முதலிடத்தையும், இந்திய ரூபா மதிப்பில் 10 இலட்சத்தையும் பெற்றுக்கொண்டார். அவரது சொந்த ஊரான அரியாலையிலும் பிரமாண்டமான திரையில் இறுதிப் போட்டி ஒளிபரப்பானது. கில்மிஷா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதும் ஊர் மக்கள் மிகப் பெரிய அளவில் ஆர்ப்பரித்து அவரது வெற்றியைக் கொண்டாடினர். (அ-ஒ-5)

# குற்றங்களுக்கு காரணம் 'அரகலய'போராட்டமே!

## உருட்டுகிறார் டிரான் அலஸ்

கொழும்பு, டிசெ. 18
'அரகலய' போராட்டத்தாலேயே நாட்டில் போதைப்பொருள், பாதாளக் கோஷ்டிச் செயற்பாடுகள் போன்ற குற்றச்செயல்கள் அதிகரித்தன - என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்ற நாளில் இருந்தே எனக்குப் பல சவால்கள் இருந்தன. அந்தச் சமயத்திலேயே கொழும்பில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு பெயர்களில் கிராமங்கள் அமைக்கப்பட்டன. வெளிநாட்டவர்கள் நாட்டுக்கு வரவில்லை. நிறுவனங்கள் மூடப்பட்டன.
தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து இயல்பு நிலையை ஏற்படுத்துமாறு ஜனாதிபதி எனக்குக் கூறினார். அதற்காக அவர் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கினார். இதன்படி 'கோத்தா கோ கம' உள்ளிட்ட கிராமங்கள் முதலில் அகற்றப்பட்டன. இவ்வாறுதான் கட்டம் கட்டமாக இயல்பு நிலை ஏற்பட்டது. கடந்த ஜூலை மாத காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் தற்போது நிலைமை சாதகமாக உள்ளது.
'அரகலய' காலப்பகுதியால்தான் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. குறிப்பாக 'அரகலய' காலத்தில் பேரணிகள், போராட்டக்காரர்கள் விவகாரம் தொடர்பிலேயே பொலிஸார் செயற்பட்டனர். அந்தப்பிரச்சினைகள் குறித்த கவனம் செலுத்தப்பட்டது. இதனால் போதைப்பொருள், பாதாளக்குழு மற்றும் இதர குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவதானம் செலுத்த பொலிஸாருக்கு நேரம் இருக்கவில்லை.
இந்த ஒன்றரை வருட காலப்பகுதிக்குள் போதைப் பொருள்கள் அதிகரித்தன. பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்தன.
அதேவேளை பாதாளக் குழு உறுப்பினர்கள் தமது போட்டிக்குழுக்களால் கொல்லப்படுகின்றனர். இல்லையேல் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழக்கின்றனர். எனவே, அந்நடவடிக்கையில் இருந்து விலகி இருப்பது நல்லது - என்றார். (அ-ஒ-44)

## வெள்ளப்..

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 444 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 538 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த மாவட்டத்தில் 3 நலன்புரி நிலையங்களில் 91 குடும்பங்களைச் சேர்ந்த 278 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை-ஆயிரத்து146குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 635 பேர் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான உதவிகள் மாவட்டச் செயலரால் நேற்று வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
இரணைமடுக் குளத்தின் கீழான தாழ் நிலப்பகுதிகளான கண்டாவளை, தர்மபுரம், பிரமந்தனாறு, முரசுமோட்டை, புன்னைநீராவி, பெரியகுளம், குமரபுரம், ஊரியான், உமையாள்புரம், பரந்தன், புளியம்பொக்கணை ஆகிய இடங்களில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளது. இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களே அதிகளவில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 126 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 463 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த மாவட்டத்தில் 2 நலன்புரி நிலையங்களில் 68 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சிலாவத்தையில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.
இதேவேளை - மன்னார் மாவட்டத்தில் 444 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 533 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை - கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பெரும் வெள்ளப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில் இடர்முகாமைத்துவமத்திய நிலையத்தின் களநிலை பாதிப்பு அறிக்கையில் தகவல்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன.
நேற்று மாலை 4 மணி வரையான நிலைவரத்தின்படி கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 2 ஆயிரத்து 570 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் இணையத்தளத்தில் ஆயிரத்து 600 பேரே பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பதிவிடப்பட்டுள்ளது. மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவாகியுள்ள உயிரிழப்பும் இந்த இணையத் தரவில் சேர்க்கப்படவில்லை. (அ-ஒ-5)

## நடைபாதை...

உடன் நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.
டெங்கு நுளம்பு அதிகம் பரவும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வடிகால்களில் நீர் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருக்கம் அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு வடிகால்களைச் சுத்தப்படுத்துவதோடு, வீதி ஓரங்களில் போடப்பட்டிருக்கும் அனுமதியற்ற நடைபாதை வியாபார நிலையங்களையும் உடனடியாக அகற்றுமாறு ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.
மறு அறிவித்தல் வழங்கப்படும் வரை யாழ். மாவட்டத்தில் காணப்படும் அனுமதியற்ற நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றுமாறும் ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார். (அ-ஒ-100)

## வீட்டுக்...

சந்தேகத்தில் வீட்டின் உரிமையாளரான பெண் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-113-214)

## 800 ரூபா...

கிழமை உயிரிழந்துள்ளார். ஊரெழு கிழக்கு வளர்பிறை சனசமூக நிலையத் தடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சிங்கரத்தினம் சிவாஸ்குமார் (வயது -40) என்ற, இ.போ.ச. பஸ் ஓட்டுநரே உயிரிழந்துள்ளார்.
அவர் கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு ஊரெழு மேற்கில் அமைந்துள்ள வீடொன்றுக்கு வழமை போன்று சென்றுள்ளார். அப்போது அங்கு வந்த இளைஞன் ஒருவன், தனக்கு வழங்க வேண்டிய 800 ரூபா கடன் பணத்தைக் கேட்டு சிவாஸ்குமார் மீது கடுமையாகத் தாக்குதல் நடத்தியுள்ளார். பின்னர் அவரைத் தானே அழைத்து வந்து அவரது வீட்டில் சேர்ப்பித்து விட்டுச் சென்றுள்ளார்.
அவரது உடல்நிலை மோசமடைந்த காரணத்தால் அடிகாயங்களுக்கு இலக்காகியிருந்த சிவாஸ்குமாரை மறுநாள் திங்கட்கிழமை மாலை வேளையில் வீட்டார் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காகச் சேர்த்தனர். கடந்த ஆறு நாள்களாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உயிரிழந்தார்.
இவரின் உயிரிழப்பையடுத்து தாக்குதல் நடத்திய இளைஞன் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளான். கோப்பாய்ப் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ-66-125)

## சாகலவுக்கு...

பதி ரணில் விக்கிரமசிங்க உத்தேசித்துள்ளார்.
அதன் காரணமாக கல்வி அமைச்சின் தற்போதைய செயலர் நிஹால் ரணசிங்கவை ஜனாதிபதி செயலகத்தின் தலைமை அதிகாரியாக நியமிக்கவும், சாகலவை இப்போதுள்ள பொறுப்புகளில் இருந்து விடுவிக்கவும் ஜனாதிபதி ஆலோசனைகளை நடத்தியுள்ளார். (அ-ஒ-6)

## இன்னமும்...

'நிலம் முழுவதும் நீரால் நிரம்பிய நிலையில் உள்ளது. வடக்கு மாகாணத்தின் அனைத்து மேற்பரப்பு நீர்நிலைகளும் நிரம்பியுள்ளன. சகல குளங்களினதும் நீரேந்து பிரதேசங்களும் நிரம்பியுள்ள நிலையில் 10 மி.மீ. மழை கிடைத்தாலும் அந்த நீர் குறித்த குளங்களுக்கே வரும். எனவே குளங்களால் வெளியேற்றப்படும் மேலதிக உபரி நீரும் மழை நீரும் சேர்ந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களின் சில பகுதிகளில் வெள்ள நிலைமையை ஏற்படுத்தியுள்ளன. அடுத்த சில நாட்களுக்கு தொடர்ந்தும் மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதனால் இந்த வெள்ள இடர் மேலும் அதிகரிக்கக்கூடும்' என்று அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-5)

## கைக்குண்டு...

ஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு விரைந்த பொலிஸார் அது கைக்குண்டு என்று அடையாளம் கண்டு மீட்டனர். (அ-ஒ-125)

## மீனவர்கள்...

பேர் காரைநகர் கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
காரைநகர் - கோவளம் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 14 மீனவர்களும் காங்கேசன்துறைக்கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (அ-ஒ-100)

## அச்சுவேலியில்...

மணித்தியாலங்களில் யாழ். மாவட்டத்தில் அச்சுவேலியிலேயே அதிகூடிய மழைவீழ்ச்சியாக 45.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி ரி. பிரதீபன் தெரிவித்தார்.
யாழ். நகரப் பகுதியில் 37.7 மில்லிமீற்றர், திருநெல்வேலியில் 35.8 மில்லிமீற்றர், வடமராட்சி அம்பனில் 34.4 மில்லிமீற்றர், தெல்லிப்பழையில் 33.3 மில்லிமீற்றர், நயினாதீவில் 29.1 மில்லிமீற்றர், சாவகச்சேரியில் 24.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன. (அ-ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைகின்றது உக்ரைன்



**கீவ், டிசெ. 18**
**உக்ரைன், மால்டோவா மற்றும் ஜோர்ஜியா ஆகிய நாடுகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமையை வழங்குவதற்கான பேச்சை ஆரம்பிக்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது.**

பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் மாநாட்டில் இது தொடர்பான உடன்பாடு எட்டப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் சார்லஸ் மைக்கேல் தெரிவித்துள்ளார்.
ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் இணைவதை ஹங்கேரி எதிர்த்தபோதிலும், இறுதியில் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தாது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய முடிவு குறித்து கருத்துத் தெரிவித்துள்ள உக்ரைன் ஜனாதிபதி விளாடிமீர் ஷெலன்ஸ்கி, 'இந்த முடிவு உக்ரைனுக்கும் முழு ஐரோப்பாவுக்கும் கிடைத்த வெற்றி' எனக் கூறியுள்ளார். (ம)



## இலக்குகளை எட்டும்வரை உக்ரைனைத் தாக்குவோம்

### புடின் மிரட்டல் தொனி

மொஸ்கோ, டிசெ. 18
இலக்கை எட்டும்வரை உக்ரைனைத் தாக்குவோம் என்று ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் தெரிவித்துள்ளார்.
உக்ரைன் நேட்டோவில் இணைவதற்கு எடுத்த முயற்சிகளுக்கு எதிராக ரஷ்யா மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கை கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகின்றது. இந்தப் போரில் உக்ரைனும் அமெரிக்காவினதும், நேட்டோக் கூட்டணி நாடுகளினதும் இராணுவத் தளவாடங்களால் ரஷ்யாவுக்கு ஈடுகொடுத்துப் போராடி வருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, இலக்கை எட்டும்வரையில் உக்ரைனைத் தாக்குவோம் என்ற பகிரங்க அறிவிப்பை விடுத்துள்ளார் புடின்.
உக்ரைனில் 6 இலட்சத்து 17 ஆயிரம் ரஷ்ய இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர். எனவே, கூடுதல் படைகள் உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் தேவையில்லை. ஆதலால், இலக்கை எட்டும் வரை உக்ரைனில் ரஷ்யாவின் தாக்குதல் தொடரும் என்று புடின் மேலும் தெரிவித்தார். (ம)

## இஸ்ரேல் - ஹமாஸ் இடையே பேச்சு ரத்து; போர் தீவிரம்



டெல்அவிவ், டிசெ. 18
பிணைக்கைதிகளை விடுவிப்பதற்காக கட்டாரில் இடம்பெறவிருந்த பேச்சை இரத்துச் செய்வதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. இதனால் போர் மேலும் தீவிரமாகலாம் என்று கருதப்படுகின்றது.
உலக நாடுகள் ஹமாஸ் - இஸ்ரேல் இடையில் போர் நிறுத்தம் விரும்புகின்றன. அமெரிக்காவும் கட்டாயம் போர் நிறுத்தம் தேவை என்கிறது. கட்டார் போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் அதே வேளை, பிணைக் கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கையிலும் தீவிரம்காட்டி வருகின்றது.
இதற்காக முன்னெடுக்கப்பட்ட பேச்சு வெற்றிபெற்று ஒரு தொகுதி பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்ட நிலையில், அடுத்த கட்டப் பேச்சை இஸ்ரேல் தவிர்த்துள்ளது.
மொசாட் அமைப்பின் தலைவர் இந்தப் பேச்சுக்காகச் செல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் தனது பயணத்தை இரத்துச் செய்வதாக அறிவித்துள்ளார். இதனால், இஸ்ரேல்-ஹமாஸ் இடையே இடம்பெறும் மோதல் மேலும் தீவிரமாகலாம் என்று கருதப்படுகின்றது. (ம)



## புதிய மீன்பிடிச் சட்டம்; மீனவ சமூகம் ஆய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 18
தகவல் அறியும் உரிமைச்சட்டம் மற்றும் கொண்டுவரப்படவுள்ள புதிய மீன்பிடிச் சட்டம் தொடர்பில் ஆராயும் ஒன்றுகூடல் யாழ்ப்பாணத்திலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினரால் காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் அனுசரணையில் இந்த ஒன்றுகூடல் முன்னெடுக்கப்பட்டது.
இதில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத் தலைவர் இரத்தினசிங்கம் முரளிதரன், வடமாகாண கடற்றொழிலாளர் இணையத் தலைவர் என். வி. சுப்பிரமணியம், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் மீனவ அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27)

**கடை வேலைக்கு ஆள் தேவை**
யாழ் நகரில் இயங்கும் பலசரக்கு கடைக்கு பொருட்கள் பொதி செய்ய நல்ல அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.
தொடர்பு: 077 628 0685

**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்**
DHL
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528

**முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு**
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
**அடிப்படைத் தகைமைகள்**
✓G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி
✓18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்
தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (Bio Data) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்
Whatsapp : 077 756 3781
jenyjude77@yahoo.com

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org